விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 244 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 03 திங்கட்கிழமை (19.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்படும்

### தேர்தல் பிரசாரத்தில் சஜித்



(கொழும்பு)

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ருவன்வெலவில் இடம்பெற்ற தேர் 15

## நல்லூரர்க் கந்தனின் திருமஞ்சம்



### யாழ்ப்பாணத்தில்

## மயங்கி விழுந்த ஆசிரியை மரணம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையொன்றில் திடீரென மயங்கி விழுந்த ஆசிரியை ஒருவர் உயிரிழந் துள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி வடக்கு அ.த.க பாட சாலையின் ஆசிரியையான 49 வயதுடைய கலைவாணி என்பவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார். 15

### பிரதான வேட்பாளர்களுடன் தொடர்ந்து பேச்சு

# தேர்தல் அறிக்கையின் பின் இறுதி முடிவு எடுக்கப்படும்

### தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம்

- தேர்தலில் தமிழ் மக்களை வழிநடத்த குழுவொன்று அமைப்பு.
- கட்சிக் கூட்டங்களில் பங்கேற்க அரியநேந்திரனுக்கு இருவாரம் தடை.

(வவுனியா)

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடை பெற்றது.

கூட்டத்தின் பின் ஊடகங்களி டம் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் எம்.பி,

பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எமது அடிப்படை நிலைப்பாடு வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஆகும். மூன்று பிரதான வேட் பாளர்களுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாகவும், பேசிய விடயங்களையும் கூட்டத் தில் தெரியப்படுத்தினோம். சில முன்னேற்றகரமான கருத்துக் களை அவர்கள் தெரிவித்துள்ளார் கள். அவர்களது தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னரே எமது இறுதி முடிவு எடுக்கப்படும்.

நாமல் ராஜபக்ஷ அவர்கள் என்னுடைய வீட்டிற்கு வந்து சந் தித்து இருந்தார். அவர்களிடம் உள்ள விடயங்களை தெரியப்படுத்தினார். அது 15

### நாகர்கோவில் ஆழ்கடலில்

## கடற்றொழிலில் ஈடுபட்டவர் மரணம்

(கரணவாய்)

நாகர்கோவில் ஆழ்கடலில் கடற்றொழிலில் ஈடுபட்ட கடற்றொழிலாளி ஒருவர் உயிரிழந்துள் ளார்.

கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த சேவுதாதின் முகமதுதாவீன் (வயது -40) என்ற மூன்று பிள்ளை களின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த அவர் 15

## பொருளாதார உடன்படிக்கை ஏற்படுத்துவதே நோக்கம்

### ஜனாதிபதி ரணில்



(அநுராதபுரம்)

ஜப்பானிலிருந்து இந்தியா வரையில் பொருளா தார ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை ஏற் படுத்துவதே இலங்கையின் நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

## பேரினவாதச் சிந்தனையால் நாடு முன்னேற்றமடையாது

### சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

பழைய பௌத்த பேரினவாத சிந்தனையால் நாடு முன் னேற்றம் அடையாது என சிறீதரன் எம்.பி தெரிவித் துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே 15

### முல்லை – புதுக்குடியிருப்பில்

## மாட்டுக்காவலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு - புதுக்குடி யிருப்புப் பிரதேசத்துக்கு உட் பட்ட மன்னாகண்டல் பகுதி யில் மாட்டுக் காவலுக்காக அமைக்கப்பட்ட கொட்டிலில் இருந்து சடலம் ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

குறித்த சடலம் நேற்று மீட் கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் மாட்டுக் காவலுக்காகச் சென்றவர் என வும் அந்தக் காவல் கொட்டிலில் உறங் 15

### திருநெல்வேலிச் சந்தையில்

## மரக்கறி வாங்கச் சென்றவர் ஆட்டோ மோதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி வாங்குவதற்குச் சென்ற வர் முச்சக்கரவண்டி மோதிய தில் மரணம் அடைந்துள்ளார்.

ஆனைப்பந்தி, பருத்தித் துறை வீதி யாழ்ப்பாணப் பகுதி யைச் சேர்ந்த சின்னையா இரத்தினசிங்கம் (வயது-80) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 22 ஆம் திகதி சிவன் பண்ணை வீதியூடாக, திரு நெல்வேலிச் சந்தை யில் மரக்கறி வாங்கு 15

## யாழ்.சிறையில் கைதி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் கைதி ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரி ழந்துள்ளதாக யாழ்.பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்த நபரே இவ் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



உறவோடு 23 . 02 . 1931

இறையோடு 20 . 07 . 2024

யாழ். இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் இராசாத்தி தம்பிஐயா

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

உலகியல் பயணத்தை நிறைவுசெய்து இறையியல் பயணத்தை
தொடர்ந்த எம் இல்லத்தலைவியின் நினைவுச்சுவட்டில்...
திங்கள் ஒன்று கடந்தது.. எம் இல்லத்து ஒளிவிளக்காய்
வாழும் காலம் உங்கள் இறை சிந்தனைகளும்,
அறிவுரைகளும் வழி காட்டியது போல எம் எண்ணமெல்லாம்
நீவிர் நிறைந்து எம்மை நாம் செதுக்கிச் சீராக்க சூட்சுமமாய்
எமக்கு வழி காட்டும் உங்கள் கரங்கள் பற்றி...
எம் வாழ்நாட்களை நகர்த்த விழைகிறோம்... தங்கள் ஆன்மா
இறைதிருவடியில் இளைப்பாற... பிரார்த்திக்கிறோம்...

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-1008)

DHL
MoneyGram money transfer
Ria
WESTERN UNION WU

உலகெங்குமுள்ளஉறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பியபணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
No.303, K.K.S Road, Jaffna. TEL : 076 315 6470

(C-1009)

## நீங்கா நினைவலைகள்

அமரர்

### சந்திரமோகன் தேனுஜன்



அன்னை மடியில் 17.06.2002

இறைவன் அடியில் 19.08.2023

ஆண்டொன்று சென்றதுவோ
ஆற்றாமையால் தவிக்கின்றோம்
அன்புமுகம் காணாமல்
கண்ணீரில் கரைகிறோம்
உயிரற்ற உடல்களாய்
உலாவரும் உறவுகளின்
உள்ளங்களில் வாழ்கிறீர்கள்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

குடும்பத்தினர்

(266)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1948 - 11 - 28

இறப்பு 2024 - 08 - 18

### நவரத்தினம் தர்மராசா (MGR)

காரைநகர் புதுறோட் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு கொச்சிக்கடையை வாழ்விடமாகவும் கொண்ட நவரத்தினம் தர்மராசா (MGR) அவர்கள் 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நீர்கொழும்பில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்(ஆசிரியர்) - தனபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் (மிருதங்க வித்துவான், வானிலை ஆராட்ச்சி உத்தியோகத்தர்) - சவுந்தராம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் சுந்தராம்பாள் அவர்களின் அன்புக் கணவரும் பிரணவராஜ் அவர்களின் பாசமிகு தகப்பனாரும் தனுஷா அவர்களின் மாமனாரும் சரணின் தாத்தாவும் பாக்கியராஜா(ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான ஸ்ரீகரலட்சுமி, சாரதா, லலிதா(அன்னம்) மற்றும் கோகனதை(சுவிஸ்), நிர்மலாதேவி(இலங்கை), அரிகரராசா(பாரிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.08.2024) நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

55/2, மார்சலஸ் றோட்,
பள்ளன் சேனை, கொச்சிக்கடை,
நீர்கொழும்பு.

தகவல்: குடும்பத்தினர்
077 603 3259
077 933 7759

(1737)

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 - 03 - 1942

இறப்பு 16 - 08 - 2024

### திருமதி மாணிக்கம் சீதாலட்சுமி

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சீதாலட்சுமி அவர்கள் 16.08.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காளமேகம் - தர்மாம்பாள் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கரத்தினம், விஜயலட்சுமி அவர்களின் அன்புச் சகோதரியும் வனிதா, சுமதி, சித்திரா, கேதீஸ்வரன், தெய்வலட்சுமி அவர்களின் அன்புத் தாயாரும் இராமநாதன், சுகந்தி அவர்களின் பெரிய தாயாரும் தில்லைநாதன், மகீவரன், செல்வரட்ணம், மலர்விழி, தேவகுமார் அவர்களின் பாசமிகு மாமியும் ரம்மியராகுலன், ஸ்ரீசக்தி, ஸ்ரீதரன், துவாரகா, பிறேம்நாத், சுவேதிகா, டக்ஷன், வினுஷ்டிகா, கெவின்போல், கீர்த்திகா, சிவராஜ், துளசிகா, கிருஷிகன், சங்கவி, சிவறஞ்சினி, மயூரன், ரிசாலினி, லோகோஜித், ஷாகோஜித், கர்னிகா, அபிஷேக், அதனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பௌசிகா, ரெஷிகா, கோபினா, ருத்விக், ருத்வின், கிருத்திக், லிதுன், தனுஸ்ரீ, அபிரா, டெய்ஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.08.2024) இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று மதியம் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 424 4365, 074 354 7144
076 170 4550

தகவல்:
குடும்பத்தினர்

(1738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதமற்ற நாட்டை கட்டியெழுப்ப தமிழர்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும்

## யாழில் உதய கம்மன்பில



(யாழ்ப்பாணம்)

**தமிழர்களுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். இனவாதமற்ற நாட்டை உருவாக்க தமிழர்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழர்களின் மீதும் அவர்களின் கலாசாரத்தின் மீதும் எமக்கு பற்று உள்ளது. ஆனால், நாட்டை பிளவுபடுத்தும் பிரிவினைவாதத்தை தூண்டும் இனவாதிகளை நாங்கள் எதிர்க்கிறோம்.

வடக்கில் நீங்களும் தெற்கில் நாங்களும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள். இரு தரப்பினருக்கும் இடையில் கலாசாரம், மொழி என்ற அடிப்படையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

வடக்கு அரசியல்வாதிகள் இனவாத கருத்துக்களை குறிப்பிட்டுக்கொண்டு தங்களை வளப்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால், தமிழ் மக்கள் பல கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை பிரிவினைவாதிகள் தங்களின் தேவைகளுக்காக பயன்படுத்தி வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் விரிசலை தோற்றுவிக்கிறார்கள். தமிழர்கள் மீது எமக்கு அன்பு உள்ளது. பிரிவினைவாதத்தை தூண்டிவிடும் அரசியல்வாதிகளை நாங்கள் வெறுக்கிறோம். தமிழர்களின் கலாசாரத்தின் மீது பற்று உள்ளது. இனவாதம் பேசுபவர்களே கீழ்த்தரமானவர்கள்.

ஆகவே இனவாதமில்லாத எம்முடன் தமிழர்கள் எங்களுடன் கைகோர்க்க வேண்டும். (ந)

# அமெரிக்க பிரதிநிதி இலங்கை விஜயம்



(கொழும்பு)

அமெரிக்காவின் தற்காலிக உதவிச் செயலாளரான ஜெனிபர் ஆர்.லிட்டில்ஜோன் இலங்கைக்கு முக்கிய விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு முக்கிய சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இதனடிப்படையில் ஓகஸ்ட் 19 முதல் 21 ஆம் திகதி வரை கொழும்பிற்கு விஜயம் செய்வார் எனவும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் முக்கிய பங்காளிகளை சந்திக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ந)


31 ஆம் நாள் ஆத்ம சாந்தி நினைவு ஆராதனையும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 10 . 1950

மறைவு 20 . 07 . 2024



கடந்த 20.07.2024 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர். திருமதி

**றொஸ்லின் மேரி எலிசபெத் சத்தியேந்திரன்**

(ஓய்வு நிலை, கைதடி நவீல்ட் பாடசாலை ஆசிரியையும் சிறந்த தையலாளரும்)

அவர்களின் ஆன்மா இளைப்பாறுதலிற்காக 31 ஆம் நினைவு ஆராதனை நாளை 20.08.2024 (செவ்வாய்க்கிழமை) காலை 7.00 மணிக்கு சென் ஜோன்ஸ் தேவாலயம், சுண்டிக்குளியில் நடைபெறும். அதன்பின்பு மதியம் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நினைவு ஆராதனை நடைபெற்று தொடர்ந்து வழங்கப்படும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குலவிளக்கு மறைந்த செய்தி கேட்டு நான் துயருற்றிருந்த வேளையில் சகல விதத்தில் உதவி புரிந்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோர், இறுதி ஆராதனையில் மலர் வளையம் வைத்த ஹாடி நண்பர்கள், ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், எனது தென்னைப்பயிர்ச்செய்கை சபை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மற்றும் இறுதி நேரத்தில் நொதேர்ண், யாழ்.போதனா வைத்தியசாலையில் அன்னாரை வைத்திருந்து சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள், தாதியர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்)

(256)

20, றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 077 505 6263

அன்புக் கணவன்
திரு.ஜெ.சத்தியேந்திரன்,
(ஓய்வுநிலை உதவிப்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை, யாழ்ப்பாணம்.


# வாக்குகளுக்காக பேசப்படும் 13 ஆவது திருத்தம்-பொன்சேகா

(கொழும்பு)

வாக்குகளைப் பெறுவதற்காக அனைவரும் 13 ஆவது திருத்தம் என்பதை உச்சரிக்கின்றனர் என ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்

பேட்டியொன்றில் 13 ஆவது திருத்தம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

பல விடயங்களை செய்ய முயல்வதன் மூலம் ஒருவர் சமூகங்களின் மத்தியில் பகைமை உணர்வை உருவாக்கக்கூடாது.

இந்த விடயத்தில் நாங்கள் எதனை செய்தாலும் நாட்டின் அனைத்து மக்களினதும் ஆதரவு அதற்கு அவசியம்.

இந்த பரிந்துரைகளை வடக்கு, கிழக்கிற்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தும் போது தென்பகுதி மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டால் அதனை உரிய தீர்வாகக் கருதமுடியாது.

இவை மிகவும் உணர்வுபூர்வமான விடயங்கள்.

இவற்றிற்கு முதல் நாங்கள் நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்தால் மக்கள் சமாதானமாக வாழப்பழகிக்கொள்வார்கள். நல்லிணக்கம், அமைதி, சமாதானம் போன்றவை காணப்படும்.

பொருளாதாரம் தொடர்பில் நாங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற போது வாக்குகளைப் பெறுவதற்காக மாத்திரம் அரசியல்வாதிகள் இனப்பிரச்சினை போன்றவற்றை பேசுகின்றார்.

இந்த விடயங்கள் குறித்து பேசுவதற்பு முதலில் நாட்டின் பின்னணி உரிய விதத்தில் காணப்படவேண்டும். (ந)

# சிலிண்டர் சின்னத்தை மீளப்பெறுமாறு முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிலிண்டர் சின்னம் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜன அரகலயே புரவெசியோ என்ற அமைப்பின் பொதுச் செயலாளர் சானக்க பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றை அளித்துள்ளார்.

குறித்த சின்னம் தங்களது கட்சிக்குச் சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

2023ஆம் ஆண்டில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது அமைப்புக்கு அந்தச் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கிய அந்தச் சின்னத்தை மீளப்பெறு மாறு அந்த அமைப்பு கோரியுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மாகாண ரீதியிலான வலைப்பந்தாட்டம் வவுனியா சைவப்பிரகாச மகளிர் சம்பியன்




உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாகாண ரீதியிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நேற்றையதினம் உடுவில் மகளிர் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முதலாம் இடத்தை தனதாக்கியுள்ளது.

இந்தப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

அத்துடன் 18 வயதுப் பிரிவின் கீழ் நடைபெற்ற போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், பரந்தன் இந்து மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பாடசாலை அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செந்தில்குமரன், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆன்மீக குரு ரெப.லிங்கேசன், உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டுச் செயலாளர் ப.தர்மகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க)

## கடற்கரை வொலிபோல்; வல்வை மகளிர் சம்பியன்



வட மாகாணப்பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கடற்கரை வொலிபோல் போட்டியில் வல்வை மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வட மாகாணப்பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான கடற்கரை வொலிபோல் போட்டிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வல்வை மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி மோதியது. முதலாவது செற்றில் வல்வை மகளிர் கல்லூரி அணி 21:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது செற்றில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 21:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆட்டத்தை சமநிலைப்படுத்தியது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடின.

இதில் வல்வை மகளிர் கல்லூரி அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 15:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

2024ஆம் ஆண்டுக்கான சிறந்த கடற்கரை வொலிபோல் வீராங்கனையாக வல்வை மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.தமிழினி தெரிவு செய்யப்பட்டார். (மு)

## ஒருநாள் கிரிக்கெட்டில் வரலாற்றுச் சாதனை படைத்த விஷ்மி குணரத்தின



இலங்கை மகளிர் அணியின் தொடக்க வீராங்கனை விஷ்மி குணரத்தின தனது முதலாவது ஒரு நாள் கிரிக்கெட்டில் சதம் அடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். அயர்லாந்து மகளிர் அணிக்கு எதிராக விளையாடிய விஷ்மி குணரத்தின தனது முதல் ஒருநாள் சர்வதேச சதத்தை அடித்து, இலங்கை மகளிர் கிரிக்கெட்டில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளார். இந்நிலையில் இந்த ஆட்டத்தில் சதம் அடித்ததன் மூலம் விஷ்மி குணரத்தின சாதனைப் பட்டியல் ஒன்றில் இடம் பிடித்துள்ளார். அதாவது இலங்கை ஒருநாள் கிரிக்கெட் அணிக்காக சதம் அடித்த 2ஆவது வீராங்கனை என்ற பெருமையை விஷ்மி குணரத்தின பெற்றுள்ளார்.

குணரத்தினவுக்கு முன்னர், சாமரி அத்தபத்து ஒருநாள் போட்டிகளில் 9 சதம் அடித்து வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு ரி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது.

இதில் முதலில் நடைபெற்ற ரி 20 தொடர் 1-1 என சமனில் முடிந்தது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதலாவது ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 260 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை சார்பில் அதிகபட்சமாக விஷ்மி குணரத்தின சதம் (101) அடித்து அசத்தினார். அயர்லாந்து தரப்பில் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். விஷ்மி 98 பந்துகளில் 9 பவுண்டரி, 3 சிக்சர் விளாசினார்.

அவர் அணியின் ஸ்கோர் எண்ணிக்கை 157 ஓட்டங்களாக இருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து களமிறங்கிய ஹசின் பெரேரா (46), சுகந்திகா குமாரி (18), அனுஷ்கா சஞ்சீவனி (17) ஆகியோர் விளையாடினர். 50 ஓவர் முடிவில் இலங்கை அணி மொத்தம் 260 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து களமிறங்கிய அயர்லாந்து அணி 49.2 ஓவர்களில் 3 விக்கெட் வித்தியாசத்தில் 261 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. (க)

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் அவுஸ்திரேலியாவை முந்தியது இந்தியா



வெஸ்ட் இண்டீஸ் மற்றும் தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் தென் ஆபிரிக்கா அணி 1-0 என வென்று தொடரை கைப்பற்றி அசத்தியது.

இந்நிலையில், இந்த டெஸ்ட் தொடருக்கு பிறகு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

டெஸ்ட் தொடரை இழந்த வெஸ்ட் இண்டீஸ் கடைசி இடத்திற்கு தள்ளப்பட்டது. டெஸ்ட் தொடரை கைப்பற்றிய தென் ஆபிரிக்கா 5ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளது.

இதில் 9 போட்டிகளில் விளையாடியுள்ள இந்தியா 6 போட்டிகளில் வெற்றி, 2 போட்டிகளில் தோல்வி என 74 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறது.

இந்தப் பட்டியலில் அவுஸ்திரேலியா 2ஆவது இடத்திலும், நியூசிலாந்து 3ஆவது இடத்திலும், இலங்கை 4ஆவது இடத்திலும் உள்ளது.

தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், இங்கிலாந்து, பங்காளதேஷ், வெஸ்ட் இண்டீஸ் ஆகியவை 5, 6, 7, 8, 9 ஆம் இடத்தில் உள்ளன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயரைச் சந்தித்த அநுரகுமார திஸாநாயக்க



(கொழும்பு)

கொழும்பு பேராயர் இல்லத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க சந்தித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை, அரசியல் நிலவரம் தொடர்பில் அருட்தந்தையர்களுடன் கலந்துரையாடிய அநுர குமார திஸாநாயக்க, அவர்களிடம் ஆசியையும் பெற்றுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் எம்.பியும் இணைந்துகொண்டார். (நி)

## அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் இடைக்கால கொடுப்பனவு-சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் முதல் அனைத்து அரச ஓய்வூதிய தாரர்களுக்கும் இடைக்கால கொடுப்பனவும் வழங்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய செப்டெம்பர் மாத கொடுப்பனவுடன் ஒக்டோபர் மாத முதல் கொடுப்பனவு வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றிக்கையின் நகல்கள் தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரி மற்றும் ஓயவுதியத் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (நி)

## விவசாயிகளுக்கு இலவச உரம் விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் 55,000 மெற்றிக் தொன் அடிகட்டு பசளை உரம் இலங்கைக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்துடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது உர இருப்பு கிடைத்துள்ளதாகவும் இதனடிப்படையில், எதிர்வரும் இரண்டு பயிர்ச்செய்கைக் காலங்களுக்குத் தேவையான அடிகட்டு பசளை உரங்கள் இந்தப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மறவன்புலோ - மேற்கு (தோப்புப் பிள்ளையார்) சிதம்பர சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ விசேட கூட்டம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 27.08.2024 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் குறித்த திருவிழா ஒழுங்கமைப்பு தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கான விசேட கூட்டம் எதிர்வரும் 22.08.2024 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கூட்டத்திற்கு தங்களின் மேலான பிரிதிநிதித்துவமும் ஆலோசனைகளும் எமக்கு தேவைப் படுவதால் குறித்த கூட்டத்திற்கு தங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

செயலாளர்,
முகாமைத்துவ குழு.

(1726)

லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(264)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9

Western Union WU MoneyGram. Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974




## நல்லை நாயகனே சரணம்

நல்லையின் நாயகனே முருகா
நலம்பல தருபவனே குமரா
எல்லையிலா எழிலை உடையவனே
ஈசன் திருமகனாய் உதித்தவனே
கல்லையும் கரையச் செய்யும்
கருணைக் கடலாய் விரிந்தவனே
தொல்லையும் போக்கித் தித்திக்கும்
தூயவாழ் வளிப்பவனே சரணம்

விஜியகண்ணன்

## நல்லைக் கந்தவேளே!

மாடுமனை கூடும்வடி வானவெழில் மாநகரில்
வானுயர வந்தபொருளே
கூடுமடி யார்கள்தொழும் பீடுபதி மீதினிலே
கோலோச்சும் ஞானவருளே
வாடுவினை யோட்டிவிளை யாடும்வடி
வேலவனே
வந்துவருள் சிந்தியருள்வாய்
ஆடுமயில் மீதிலுறை யருவுருவக்
காட்சிநிறை
அருநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

19.08.2024
ஆவணி 03, திங்கட்கிழமை
பூரணை பின்னிரவு 1.11 மணிவரை
திருவோணம் முற்பகல் 9.12 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
பூரணை விரதம், அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** — வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** — நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** — செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** — பாராட்டும் புகழும் கூடும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** — அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**சிம்மம்** — தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், மறைமுக எதிர்ப்புக்கள் வரும்.

**விருச்சிகம்** — சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** — மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மிதுனம்** — எந்தக் காரியத்திலும் நிதனாத்தைக் கடைப் பிடிப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** — பொது வாழ்வில் புகழ் கூடும், மன நிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** — செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** — அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், கௌரவமான நாள்.

உன் கடமையைச் செய் உனக்கு வேண்டியது தவறாது கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தனின் தேர்ப்பவனி



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்ப்பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. இதில் பெருமளவான பக்தர்கள் பங்குபற்றினர்.
(படம்: சிவசாந்தன்)

## நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளஞ் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று திங்கட்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

மாலை 6.45 -7.10 மணிவரை நடைபெறும் இசையரங்கில் பாட்டு - மதுவந்தி மயூரன், வயலின்- இ.நிரோஜன், மிருதங்கம்- ர. லயசர்மா, முகர்சிங்- கானாம்ருதசர்மா ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

7.15-8.05 மணிவரை இடம் பெறும் இசையரங்கில் பாட்டு - பங்கயற்செல்வி முகுந்தன், வயலின்- ப.சியாம கிருஷ்ணா, மிருதங்கம்- ஜெ. கானகோகிலம், கஞ்சிரா- மு.லம்போதரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழகம் நடத்தும் வட மாகாணத்தில் வாழும் முதியோர்களின் பிரச்சினைகள் பற்றிய கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சொற்பொழிவாற்றுவார். இதில் நிர்வாக சபைக்குழு தெரிவு செய்யப்படும்.077 606 8656, 021 225 5644 போன்ற தொலைபேசி இலக் கங்கள் மூலம் வருகையை உறு திப்படுத்துமாறு தலைவர் க. கணேச மூர்த்தி அறிவித்துள்ளார். (நி)

## கண்காணிக்கப்படும் சமூக ஊடகங்கள்

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பு தினத்திற்கு முந்தைய தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களை கண் காணிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சமூக ஊடக கண்காணிப்பு அறிக்கைகளை தேர்தல் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகஅவர் தெரிவித்துள்ளார். (நி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3199

Search for people, places and things

### சந்தியா




### வானதி




### அனுஷ்கா




### சானுஜா




### பானு




### கர்ஷனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ



## யாழ்ப்பாணம் சுன்னாகம், கந்தரோடை ஆலடி

# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## பஞ்ச குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா-2024



"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

**மஹா கும்பாபிஷேகம்**
19.08.2024
திங்கட்கிழமை
காலை 5.30 மணிமுதல் 7.00 மணிவரை



**வீரகத்தி விநாயகர் துணை மஹாகும்பாபிஷேக பிரதான குருவின் ஆசிச்செய்தி**

விநாயகருக்கு பஞ்ச குண்ட மஹாகும்பாபிஷேகம் நடைபெறும் நன்நாளில் ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஸ்வர்க்கீயஸ்ரீ பிரம்மஸ்ரீ நடனசபாபதி சர்மா நீண்டகாலம் பூசை கருமங்களை நிறைவேற்றி வந்தார். அவரைத் தொடர்ந்து இவ்வாலயத்தின் பிரதம குருவாக இருந்து எம் பெருமானுக்கு பூசை, கிரிகைகளை செய்ய கிடைத்திருப்பது பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

முக்கண்ணையுடைய அதிசய கோமாதாவாக 1977 இல் அவதரித்து கோவில் திருப்பணிகளை நிறைவேற்றினார். தினமும் வருகை தந்து வழிபடும் அடியவர்கள் யாவருக்கும் இன்பமான வாழ்வு கிடைக்க வேண்டுகின்றேன்.

'கிரியாரத்னா'
சிவஸ்ரீ.ச.பரமேஸ்வரக்குருக்கள்,
பிரதிஷ்டா பிரதமகுரு.



**அருட்கடாட்சம் கிடைக்கட்டும்**

நாம் வாழும் சமகாலத்தில் 1977 ஆம் ஆண்டு ஆவின் கன்றாக இரண்டு தலைகள் இணைந்த வடிவிலும் மூன்று கண்களுடனும் அவதரித்து பேரருள் புரிந்த வீரகத்தி விநாயகர் கும்பாபிஷேக நன்நாளில் நாடு செழிக்கவும் கந்தரோடை கிராமம் உட்பட எல்லா இடங்களிலும் எம்பெருமானின் அருளாசி கிடைக்கவும் வேண்டுகின்றேன். இப்பெருங் காரியத்தை நிறைவேற்றிட உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் பெரும் ஆதரவு அளித்த அன்பர்களுக்கும் எம்பெருமான் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுகின்றேன்.

திரு.வ.நந்தீஸ்வரன்,
தலைவர் ஆலய பரிபாலன சபை.



**விநாயகர் திருவடிகளை பிரார்த்திக்கின்றேன்.**

இலங்காபுரியின் வட பால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் சைவம் தழைத்து ஓங்க பல சமய அறிஞர்கள் அறம் வளர்த்த மக்கள் செறிந்து விளங்கும் இடம் கந்தரோடை. ஆலடி ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் திருப்பணி முடித்து மகா கும்பாபிஷேகம் என்று அழைக்கப்படுகின்ற பெருஞ்சாந்தி பெருவிழா 19.08.2024 ஆம் நாள் திங்கட்கிழமை நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அவ்விழா மிகச்சிறப்புற நடந்தேறிடவும் அதில் கலந்து கொள்கின்ற அன்பர்களும் இப்புனித திருப்பணியில் பங்கேற்ற திருப்பணிச் சபையினருக்கும் ஆதீன கர்த்தாவிற்கும் அடியார்களுக்கும் எல்லா நலங்களோடும் வளங்களோடும் வாழ்ந்திடவும் ஆலடி ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் திருவடிகளை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

வாழ்க வையகம் சைவம் வளர
ஆலயத் திருப்பணிகள் சிறப்புற வேண்டும்.

ச.ரவிக்குமார்,
செயலாளர்,(கந்தரோடை).



**விநாயகர் அருள் கிட்டட்டும்**

சைவமும் தமிழும் தழைத் தோங்கும் யாழ்ப்பாண மண்ணில் வயலும் வயல் சார்ந்த நிலமுமான கந்தரோடையின் தொடக்கமாகத் திகழும் விக்கினங்களைத் தீர்க்கும் ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. ஆரம்பத்தில் இவ்வாலயத்தைக் கட்டுவதற்கு விநாயகர் தானாகவே முக்கண்ணுடைய பசுக்கன்று ஒன்றை அடியவரின் வீட்டில் அவ தரிக்கச் செய்து தனது திருப்பணியை முடித்து மறைந்தருளினார்.

இறைவன் தான் நினைத்ததைச் செய்து முடிப்பார் என்பதற்கிணங்க ஆலயத் திருப்பணிக்கு மனமுவந்து அடியார்கள் செய்த அன்பளிப்பினால் ஆலயம் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. வீரகத்தி விநாயகப் பெருமான் புதுப்பொலிவுடன் தனது அருளாட்சியை வழங்க திருவுளம் கொண்டுள்ளமை மன மகிழ்ச்சி தருகின்றது.

இவ்வாலயம் மேன்மேலும் சிறப்புற்று அருள்பாலிக்க எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானை சிரம் தாழ்த்தி வேண்டி வணங்குகின்றேன்.

செ.பாலகிருஷ்ணன்,
பொருளாளர்.

**விநாயகப் பெருமான் அடியார்களே!**

இந்துமா சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கைத்தீவின் வடபாலுள்ள யாழ்ப்பாணத்தில் சகல வளங்களும் நிறைந்த சுன்னாகம் கந்தரோடை எனும் பகுதியில் திருமூலர், சித்தர்கள், மகான்களால் போற்றிசைந்த சிவபூமியெனும் புண்ணியஸ்தலம் ஆலடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் கொண்டு எழுந்தருளி நல்லாட்சி புரியும் எம்பெருமானுக்கு பெருஞ்சாந்தி குடமுழுக்கு காணவாரீர். சீர் திகழ் குரோதி வருடம் ஆவணித்திங்கள் 3ஆம் நாள் திங்கட்கிழமை திருவோண நட்சத்திரமும் சிம்ம லக்கினமும் கூடிய சுபேந்திர முகூர்த்த வேளையில் சூர்யோதயம் 5.30 மணிமுதல் 7.00 மணி வரையுள்ள காலை கதிரோன் ஒளி வீச எம் பெருமானுக்கு பஞ்ச குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு யாக கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

ஆலய பரிபாலன சபையினரும்
தொண்டர்களும்

(1734)

---


தெரிவுசெய்த பொருட்கள் 40% வரை கழிவு



# JAFFNA EXPO - 2024

## நிர்மாணம், கைத்தொழில், கல்வி, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்ட விழா

23 24 25 ஆம் திகதி ஆகஸ்ட் 2024

@ முற்றவெளி விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம், இலங்கை
மு.ப.10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை



கட்டிடம் மற்றும் நிர்மாணப் பொருட்கள்
கட்டுமான ஆலோசனை சேவைகள்
கல்வி, மற்றும் தகவல் தொழில்நுட்பம்
கட்டுமான இயந்திரங்கள் மற்றும் கைத்தொழில் வாகனங்கள்
உபகரங்கள் மற்றும் சாதனங்கள்
நிலைபேறான வலுசக்தி
கைத்தொழில் மற்றும் பொறியியல்
கமத்தொழில் வாகனங்கள்

(இ)

ALUMEX · TVS · asianpaints · SCOT CAMPUS · வலம்புரி · agro · EME · CIOB

+94 77 22 79 594
+94 72 21 22 709


---


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 30
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L.நகைதொழில்
எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/14725

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 48 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Administration
எதிர்பார்ப்பு: உத்தியோகம், வெளிநாடு எனில் கனடா, லண்டன்
தொ.இ: B/14727

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: பூராடம்
9 இல் சூரி செவ்
உயரம்: 6
தகைமை/தொழில்:IT Diploma,Own Company(swiss)
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள படித்த பெண்
தொ.இ: B/14728

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
1 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப் பு:வெளிநாடு, தொழில் புரியும் மணமகன்
தொ.இ: G/14745

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 71
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: EEE, MBA
எதிர்பார்ப்பு: UK PR உள்ள மணமகன்
தொ.இ: G/14746

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 48
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:Bsc,PHD, Mphil
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14750

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# ராஜஸ்தானில் வன்முறை மக்கள் ஒன்று கூடத் தடை!



(டில்லி)
இந்தியா ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து மக்கள் ஒன்று கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இணைய சேவையும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உதய்பூரில் 10 ஆம் வகுப்பு கல்வி கற்கும் பாடசாலை மாணவர் ஒருவரை சக மாணவர் ஒருவர் கத்தியால் குத்தியதில் பாதிக்கப்பட்ட மாணவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதல் நடத்திய மாணவனும், தாக்கப்பட்ட மாணவனும் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் சமூக பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனால் நான்கு கார்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதுடன், பல வாகனங்கள் கல் வீசி தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பதற்றம் ஏற்பட்டுள்ளதால், உதய்ப்பூரின் பல பகுதிகளில் கடைகள் மூடப்பட்டு மக்கள் கூடுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் தவறான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுக்க இணைய சேவை முடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சூடுபிடித்துள்ள அமெரிக்க தேர்தல் பிரசாரம் மீண்டும் கமலா ஹரிஸை விமர்சிக்கும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)
மக்கள் அதிக பண வருமானமும் குறைவான வரியையும் செலுத்த வேண்டுமென்றால் தனக்கு வாக்களிக்குமாறு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிடும் கமலாஹாரிஸின் புதிதாக வெளியிடப்பட்ட பொருளாதாரத் திட்டத்தை கடுமையாக விமர்சித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இட்ட பதிவொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அவரது பொருளாதாரத் திட்டங்கள் அமெரிக்க மக்களின் வாழ்க்கைச் செலவை மோசமாக்கும் எனவும் வலியுறுத்தியுள்ளார். அவர் தொடரந்தும் தெரிவிக்கையில், "கமலா ஹாரிஸ் நான்கு வருடம் ஜனாதிபதியானால் பொருட்களின் விலை தற்போது இருப்பதை விட 100 மடங்கு அதிகமாகும்.

அவரது திட்டத்தின்படி, "சோவியத் முறை" விலைக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவார். மேலும் கலிபோர்னியாவின் அதிக வரி கொள்கைகளை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவார்.

இதனால், ஒவ்வொரு அமெரிக்கர்களும் அவர்களின் வருமானத்தின் 80% வரை வரி செலுத்த வேண்டிய நிலை உருவாகும்" என குறிப்பிட்டுள்ளார்.



மேலும் கமலா ஹரிஸ் மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவரது கம்யூனிஸ விலைவரம்பினை நடைமுறைப்படுத்தினால் இதுவரை இல்லாதது போல் அமெரிக்க மக்கள், பஞ்சம், பட்டினி, வறுமை போன்றவற்றை எதிர் கொள்ள நேரிடும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீதான விசாரணைகள் ஆரம்பம்



(டாக்கா)
பங்களாதேஷில் மாணவர்களின் போராட்டத்தின் போது நடந்த படுகொலை தொடர்பாக, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட 10 பேர் மீதான விசாரணையை அந்நாட்டு நீதிமன்றம் ஆரம்பித்துள்ளது.

பங்களாதேஷில், சுதந்திர போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டத்தில், 560 பேர் உயிரிழந்தனர்.

இதன் எதிரொலியாக பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அங்கு அமைந்தது.

ஜூலை முதலாம் திகதி முதல் ஒகஸ்ட் 5ஆம் திகதி வரையிலான காலத்தில் நடத்தப்பட்ட கொலைகள் குறித்து, சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தால் விசாரிக்கப்படும் என இடைக்கால அரசு அறிவித்திருந்தது.

போராட்டத்தின் போது, முகமதுபூர் பகுதியில் பொலிஸார் துப்பாக்கிச் சூட்டில், மளிகைக் கடை உரிமையாளர் அபு சயீத் கொல்லப்பட்டது தொடர்பாக, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மாணவர்களின் போராட்டத்தின் போது ஒன்பதாம் வகுப்பு மாணவர் ஆரிப் முகமது ஷயாம் கொல்லப்பட்டது தொடர்பாக அவரது தந்தை முறைபாடு செய்துள்ளார்.

அதில், மாணவர்கள் மீது அப்போதைய அரசு வன்முறை அடக்கு முறையை ஏவிவிட்டதால், தன் மகன் உயிரிழந்துள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இதன் விளைவாகவே பரவலான உயிரிழப்புகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, முன்னாள் அமைச்சர்கள் என, 10 பேர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை, டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (நி)

# போர் ... பின்...

(மொஸ்கோ) -
உக்ரைன் நட...
டோஹாவில் நட...
பேச்சுவார்த்தை...
கியுள்ளதாக செ...
இதன் மூலம் உக்...
போர் மேலும் ப...
தகவல் வெளியா...

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று 905 நாட்களாக நீடித்து வரும் நிலையில் இந்தப் போரில் இதுவரை ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் போரில் உக்ரைனுக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் நிறுத்த உடன்படிக்கை;
# ன்வாங்கிய ரஷ்யா?

ா)

நடத்திய திடீர் தாக்குதலால்
நடைபெறவிருந்த போர் நிறுத்த
தையில் இருந்து ரஷ்யா பின்வாங்
செய்திகள் வெளியாகியுள்ளன.
உக்ரைன் - ரஷ்யா இடையேயான
ம் பல மாதங்கள் நீடிக்கலாம் என
ரியாகியுள்ளது.



கான ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் வழங்கி வருகின்றன. இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வரும் நிலையில் அமைதி பேச்சுவார்த்தைக்கு இரு நாடுகளும் உடன்படாததால் போர்ப் பதற்றம் தொடர்ந்தும் நீடித்து வருகிறது.

இதனிடையே, 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருந்த நிலையில் உக்ரைன் நடத்திய தாக்குதலால் பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியடைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கட்டார் தலைநகர் டோஹாவில் இம்மாதம் உக்ரைன் உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான போர் நிறுத்தப் பேச்சு வார்த்தை நடைபெற விருந்தது.

இந்நிலையில், ரஷ்யாவின் குர்ஷ்க் மாகாணத்தின் மீது உக்ரைன் திடீர் தாக்குதல் நடத்தியதில் கடந்த 6 ஆம் திகதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட உக்ரைன் வீரர்கள், ராணுவ டாங்கிகள், ஆயுதங்களுடன் ரஷ்யாவின் குர்ஷ்க் மாகாணத்திற்குள் நுழைந்தனர்.

இதேவேளை , ரஷ்ய வீரர்களை பணயக்கைதிகளாக சிறைபிடித்ததோடு அப்பகுதியில் ராணுவ நிலைகளை அமைத்துள்ள உக்ரைன் ராணுவம் சுமார் 400 சதுர கிலோமீற்றர் பரப்பளவை கைப்பற்றியுள்ளதாக தகவல் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 25 ஆண்டுகளுக்கு பிறகு காசாவில் போலியோ பாதிப்பு

(காசா)

25 ஆண்டுகளுக்கு பிறகு காசாவில் போலியோ பாதிப்பு பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய காசா பகுதியில் தடுப்பூசி போடப்படாத 10 மாதகச் குழந்தைக்கே போலியோ நோய் இருப்பது உறுதி செய்யப்பட் டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் குழந்தைகள், பெண்கள் உள்பட 39 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதுவரை பலியாகியுள்ளனர். போர் காரணமாக காசாவில் மருத்துவ சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் குழந்தைகளுக்கு தடுப்பூசி போட முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இந்த நிலையிலேயே 25 ஆண்டுகளுக்குப் பிறகு காசாவில் போலியோ நோயை பதிவு செய்துள்ளதாக பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் கழிவுநீரில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் போலியோ வைரஸ் கண்டறியப்பட்டதாகவும், ஒரு குழந்தைக்கு போலியோ அறிகுறிகள் இருப்பதாக வைத்தியர்கள் சந்தேகித்ததாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஜோர்டான் தலைநகர் அம்மானில் நடத்தப்பட்ட சோதனையிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா நடுநிலையாக இல்லை

### ஈரான் சாடல்

(டெஹ்ரான்)

காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா நடுநிலையாகச் செயற்படவில்லை என ஈரானின் தற்காலிக வெளியுறவு அமைச்சர் அலி பகேரி கனி தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், டோஹாவில் நடந்த போர்நிறுத்த பேச்சுவார்த்தை குறித்து கட்டார் வெளியுறவு அமைச்சர் முகமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானியுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, காசாவில் நடைபெற்ற தாக்குதல்களையும், டெல் அவிவ் நகரில் [illegible] ளிக் கும்பல் மற்றும் அவர்களின் முக்கிய ஆதரவாளரான அமெரிக்காவின் வஞ்சகம் மற்றும் பொய்மை தன்மையையும் தாம் எச்சரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, காசாவிலுள்ள சியோனிஸ் ஆட்சியாளர்களுக்குப் போர் ஆயுதங்களை வழங்குவதன் மூலம், இஸ்ரேலுக்கு ஆதரவாக செயற்படுவதனால் அமெரிக்கா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஒரு நடுநிலையான மத்தியஸ்தராக செயற்படவில்லை எனத் தெரிவித்தார்.

முன்னதாக, ஹமாஸ் தனது உத்தியோகபூர்வ டெலிகிராம் சனலில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அமெரிக்க அரசு மற்றும் பிற மேற்குலக நாடுகளும் இணைந்து காசா இனப்படுகொலைக்கு தேவையான ஆதரவு மற்றும் நேரத்தை வழங்கி வருவதாக குற்றம் சாட்டியுள்ளது.

இது இவ்வாறிருக்க, காசா பகுதியில் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து தாம் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் சமீபத்திய பேச்சுவார்த்தைகளின் பிறகு இந்த ஒப்பந்தத்தை நிறைவு செய்யும் நோக்கில் தனது வெளியுறவுத்துறை செயலாளரை இஸ்ரேலுக்கு அனுப்பவுள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் மீதான விசாரணை

## அவதானிக்கும் அமெரிக்கா

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து கண்காணித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலாண்மை மற்றும் வளங்களுக்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் துணை செயலாளர் ரிச்சர்ட் ஆர் வெர்மா இதனை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளிற்கு அமெரிக்காவின் அர்ப்பணிப்பை அவர் மீள வலியுறுத்தியுள்ளார்.

வலுவான விசாரணை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் சிவில் சமூகத்தின் பங்களிப்பின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கை அதிகாரிகளுக்குச் சட்ட மற்றும் விசாரணை ஆதரவை வழங்குவதில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதியை வழங்கும் பொறுப்புக் கூறும் இலக்கை அமெரிக்கா பகிர்ந்து கொள்கின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந)

# வாக்கு கேட்டு வந்தால் தாக்குவோம்

## எச்சரிக்கை விடுத்துள்ளள நாவுல மக்கள்

(மாத்தளை)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கக் கோரி கிராமத்துக்கு வருபவர்களை தாக்கப் போவதாக மாத்தளை நாவுல அடவல கிராம மக்கள் எச்சரிக்கை விடுத்து துண்டுப்பிரசுரங்களை ஒட்டியுள்ளனர்.

அத்தோடு, பல ஆண்டுகளாக தங்கள் கிராமத்துக்கு வந்த அரசியல்வாதிகள் அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறை வேற்றப்படவில்லை என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

தங்கள் கிராமத்துக்கு செல்லும் சாலை வசதி, விவசாய நிலங்களில் உள்ள பிரச்சினை மற்றும் போக்குவரத்து சிரமம் போன்ற காரணங்களால் இத்தேர்தலில் கிராமமக்கள் வாக்களிப்பதை புறக்கணிப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசியல்வாதிகள் தங்கள் கிராமத்திற்கு வரவேண்டாம் என்றும் அவ்வாறு வந்தால் பதில் சொல்லத் தயார் என்றும் கிராம மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 160 | 150-180 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 120 | 300 | 100 | 300 |
| தக்காளி | 250 | 300 | 300 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150-170 | 200 |
| கோவா | 350 | 330 | 300 | 350 | 400 |
| கரட் | 300 | 320 | 380 | 350 | 350 |
| பூசணி | 160 | 160 | 140 | 100 | 160 |
| புடோல் | 80 | 150 | 150 | 120 | 160 |
| வாழைக்காய் | 300 | 280 | 250 | 250 | 320 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250-400 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 400 | 300-350 | 350 |
| வெண்டக்காய் | 150 | 100 | 120 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200-300 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 200 | 320 | 300 | 250 | 250 |
| கறிமிளகாய் | 500 | 600 | 700 | 550 | 700 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 180 | 30-50 | 150 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 500 | 600 |
| கத்தரி தம்புள்ள | 160 | 150 | 180 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 600 | 500 | 300 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 60-100 | 60-120 | 80-130 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 60 |

# இன்று ஒரு தகவல் 214



தென்கச்சி கோ. சுவாமிநாதன் நன்

## மனிதநேயம்

சார் நம்ம உடம்ப நாம் நல்ல படியாக வைத்திருக்க வேண்டும். என்று தான் எல்லோரும் ஆசைப்படுகின்றோம். சரி இதற்கு என்ன வழி? என்று கேட்டா விவரம் தெரிந்தவர்கள் முன்று வழியை சொல்லு கிறார் கள். அதாவது நல்ல உணவு, தேவை யான தேகப் பயிற்சி, கவலைப்படா மல் இருக்கிறது. இது மூன்றும் தான் அதற்கு வழியாம். இது மூன்றி லேயும் நாம் கொஞ்சம் கவனம் செலுத்த ஆரம்பித்தால் எந்த நோயும் நம்மிடம் நெருங்க முடியாது என்று பெரிய டொக்டர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள்.

இதுவரைக்கும் சரி அவர்கள் சொல்லுவது ஒரு விதத்திலே நியா யமாகத் தெரிகிறது. இப்போது நான்காவதாக ஒரு விடயத்தை அதோடு சேர்த்தி ருக்கிறார்கள். அது தான் கொஞ்சம் வேடிக்கையாக இருக் கிறது.

என்ன தெரியுமா அது? மனித நேயம். மற்றவர்களை நேசியுங்கள், அடிக்கடி மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள் அது உங்கள் உடல் நலத்திற்கு நல்லது.அடுத்தவர்களை நேசிப்பதற்கும், நமது உடம்பு நன்றாக இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?

கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலே இருக்கக் கூடிய மருத்துவத்துறை பேராசிரியர் டொக்டர் கென்னத் பிரிடியர் இதற்கு விளக்கம் கொடுத்து இருக்கிறார். அவர் என்ன சொல்லுகிறார் தெரியுமா? பொதுவாக மற்றவர்களுக்கு நாம் உதவி செய்யும் போது அல்லது மற்றவர் களை நேசிக்கும் போது நாம் மகிழ்ச்சியோடு இருக்கின்றோம். அந்த சமயத்திலே நமது உடம்பிலே இருக்கக் கூடிய நோயை எதிர்க்கின்ற தன்மை கொண்ட செல்கள் அதாவது (Cells of the Imunse system) முழு சக்தியோடு இயங்குகிறது. அப்படி அது எல்லாம் இயங்கும் போது நமது உடம்பில் நோய் எதுவும் வருவதில்லை என்கிறார் அவர்.

ஆனால் அதே சமயம் நாம் கவலையோடு இருக்கும் போது தனிமையாக வாழும் போது நோய் தடுப்பு செல்கள் உடம்பிலே குறைவாகவே இருக்கும் என்று இப்போது கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதனாலே இப்படிப்பட்டவர்களுக்கு பிணிகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக இருக் கிறது என்கிறார் அந்த டொக்டர்.

இது சம்பந்தமாக சான் பிராக்சிஸ் கோவிலே ஒரு ஆராய்ச்சியே நடத்திப் பார்த்தி ருக்கிறார்கள். எப்படித் தெரியுமா? குடும்பத்தை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து கொண்டி ருக்கின்ற முதியோர் பலபேரைத் தேடிக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இங்கு என்றால் தேடாமலே கண்டுபிடிக்கலாம். அங்கு தேட வேண்டியிருந்தது. அந்த பெரிய வர்களுக் கெல்லாம் உடம்பிலே என்னென்ன நோய் கள் இருக்கு என்ற விவரமாக குறித்து வைத்துக் கொண்டார்கள்.

அவர்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரே இடத்தில் தங்க வைத் தார்கள். அவர்களை முன்று பிரிவாக பிரித்தார்கள் ஒவ்வொரு பிரிவிற் கும் மற்றவர்களுக்கு உதவி செய்கிற மாதிரியான பொறுப்புக்களைக் கொடுத் தார்கள். உதாரணமாக ஒரு பிரிவிற்கு சிறைச் சாலைக்குப் போய் உபதேசம் செய்கின்ற வேலை. இன்னொரு பிரிவிற்கு சின்ன சின்னப் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கின்ற வேலை.

இது மாதிரி பொறுப்புக்களை கொடுத்ததற்கு பிறகு அந்த தாத்தாக்கள் எல்லாம் மிகவும் பிஸி ஆகிவிட்டார் கள்.ஆறு மாதம் கழித்து அவர்கள் உடம்பு பரிசோதனை செய்து பார்த்தப்போ நோயின் தன்மை நிறையப் பேருக்கு நிறையவும் குறைந்து இருப்பது தெரிய வந்தது. மற்றவர் களுக்கு உதவுவது ஒரு வகையான மனிதநேயம்.

இதை ஆங்கி லத்தில் alquism என்று சொல்லுகின்றார்கள். எங்கள் ஊர் ஆன் மிகவாதிகள் அடுத்த வர்களுக்கு உதவுங்கள் அப்படி என்று சொன்னா நாங்கள் விவாதம் செய்ய ஆரம்பிக்கின்றோம். இப்ப விஞ் ஞானிகளே சொல்வதால் வேறு வழியில்லாமல் கேட்கின்றோம். இந்த காலத்தில் எதுவாக இருந்தாலும் ஒரு ஆதாரம் தேவைப்ப டுகின்றது. அது தான் கஷ்டம்.

அது இருக்கட்டும் இப்பவெல்லாம் நாங்கள் எந்த அளவுக்கு மற்றவர்களுக்கு உதவியாக இருக்கின்றோம். இதுக்கு ஒரு ஆதாரம் பார்க்கலாமா? ஒரு பேருந்து போய்க் கொண் டிருந்தது. ஒரு பெரிய ஆள் பெரிய ஒரு மூட்டை மேலே அமர்ந்திருந்தார். மிகவும் நெருக் கடியான இடம். நின்று கொண்டு பிராயாணம் செய்பவர்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றது அது. நடத்துனர் கத்திக் கத்திப் பார்த்தார். அந்த ஆள் அசையவே இல்லை. அந்த மூட்டை மேலே அமர்ந்திருந்தார்.

ஒரு தரிப்பிடத்திலே பேருந்து நின்றது நடத்துனருக்கு மிகவும் கோபமாய் போய் அந்த மூட்டையைத் தள்ளிவிட்டார். அப்பவும் அந்த ஆசாமி அசரவும் இல்லை கவலைப்படவும் இல்லை. என்ன சேர் உங்களுக்கு கோபம் வரவில்லையா? என்று கேட்டார் பக்கத்தில் இருந்தவர். அதுக்கு அந்த ஆள் நான் எதற்குக் கவலைப்பட வேண்டும் அந்த மூட்டை என்னுடையது இல்லை என்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் யாழில்




(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், சங்கானை, காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய குறித்த விசாரணைகள் யாழ்ப் பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. (நி-33)

# தந்தை செல்வா நினைவுத் தூபியில் தமிழ்ப் பொது வேட்பாளர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் இன்றையதினம் தந்தை செல்வா நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தினார். நேற்றுக்காலை 9 மணி யளவில் தந்தை செல்வ வின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன்,



சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (நி)





கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பகுதியில் நெத்திலி ஆற்றம் கரையில் அமர்ந்து அடி யார்களுக்கு அருள் பாலித்து வரும் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திரு விழா நேற்றுக் காலை 10 மணி யளவில் அடியார்கள் குடை சூழ மிக சிறப்பான முறையில் நடைபெற்றது.

(படம்: தேவானந்தன்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## ஈசுரமூலி / தலைச்சுருளி

**Botanical Name- Aristolochia indica**
**Family- Aristalochiaceae**

பல்லாண்டு வாழக்கூடிய ஏறு கொடி மூலிகை. மிகுந்த வாசணையுடையது. தடித்த வேரைக் கொண்டது. இலைகள் ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டது. மென்மையான பச்சை கலந்த வெள்ளைப்பூக்கள் ஆறு சோணைகளை உடைய நீள் வட்டமான பழுங்கள் நிறைய விதைகள் காணப்படும். விதைகளைத் தூவிப் பயிரிடலாம். விதைத்து 180 நாட்களில் இலைகளைச் சேகரிக்கலாம். இரண்டு வருடங்களின் பின்பு வேர்களைச் சேகரிக்கலாம். இலைகளும் வேரும் மருத்துவக் குணங்கள் நிறைந்தவை ஆனால் பூக்களில் மட்டும் விரும்பத்தகாத மணம் இருக்கும்.

இலைகளும் வேரும் நல்ல வாசணையுடையது. இந்த மூலிகையின் இலைகளும் வேரும் விஷக்கடி, வாத நோய்கள், மூட்டுவலி, பசியின்மை, தோல்நோய்கள் போன்றவற்றை நீக்கும் தன்மையுண்டு. அத்துடன் பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் ஒழுங்கற்ற மாதவிடாய் சக்கரம் உள்ளவர்கள் ஈசுரமூலி இலைகளையும் அதேயளவு கருஞ்சீரகம் சேர்த்து குடிநீர் காட்சி 30-60 மில்லி அளவு காலை மாலை 7 நாட்கள் எடுத்துவர மாதவிடாய் ஒழுங்காகும். அல்லது ஈசுரமூலி இலைகளை சேகரித்து நன்கு கழுவி உலர்த்தி பொடித்து அதேயளவு கருஞ்சீரகத்தையும் சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு தேனில் கலந்து 7 நாட்கள் கொடுத்தால் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் குருதித்தடை நீங்கி இரத்தப் போக்கு சீராகும். அதே போல் பசியின்மை, வயிற்றுப் பொருமல், செரியாமை போன்றவற்



றிக்கு ஈசுரமூலி இலைகளை சேகரித்து நன்கு கழுவி வைத்துக் கொண்டு அதற்களவான தக்காளி, கறிவேப்பிலை, செத்தல் மிளகாய், நற்சீரகம், மிளகு, வெள்ளைப்பூடு ஆகியவற்றை எடுத்து ஒரு வாணலியை அடுப்பேற்றி சிறிதளவு நல்லெண்ணெய் விட்டு கொதித்ததும் செத்தல் மிளகாய், ஈசுரமூலி இலைகள் போட்டு வதக்கி, வெந்ததும் சிறு துண்டுகளாக வெட்டிய தக்காளியைப் போட்டு வதக்கி நீர் விட்டு கொதித்ததும் ஈசுரமூலி இலைகளை வெளியே எடுத்து விட்டு (அதாவது அதன் சாறு முழுவதும் கொதித்த நீரில் இறங்கியிருக்கும்) பின்பு அரைத்த நற்சீரகம், மிளகு, உள்ளி, **கற்கண்டைப்** போட்டு தேவையான அளவு உப்பும் சேர்த்து இறக்கி ஆறவிட்டு சூப் மாதிரி பருகி வந்தால் சமிபாடு இன்மை, பசியின்மை, வயிற்றுப் பொருமல் நீங்கி நன்கு பசி எடுக்கும்.

அசைவ உணவுகளான ஆட்டிறைச்சி போன்றவற்றை சமைக்கும் போது ரம்பை இலைகளிற்கு பதிலாக ஈசுரமூலி தழைகளை சேர்க்கவும். இறைச்சி வகைகளை மென்மையாக்குவதுடன் இலகுவில் சமிபாடு அடையச் செய்யவும் உதவும். இதே போன்று விஷ ஜந்துகள் ஏதாவது தீண்டினால் இலைச்சாறு எடுத்து 60 மில்லி அளவு காலை, மாலை விஷக்குறி குணங்கள் குறையும் வரை கொடுக்கலாம். அல்லது ஈசுரமூலி வேரை சேகரித்து நன்கு கழுவி சிறுதுண்டுகளாக நைய இடித்து நான்கு பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை நச்சுக்குறி குணங்கள் நீங்கும் வரை கொடுக்கலாம்.

மூட்டுக்களில் ஏற்படும் வலி, தாபிதாம் போன்றவற்றிற்கு ஈசுரமூலி வேர்களை சேகரித்து நன்கு கழுவி சிறு துண்டுகளாக வெட்டி நிழலில் நன்கு உலர்த்தி பொடித்து இரண்டு கிராம் அளவு காலை, மாலை தேனில் 48 நாட்கள் கொடுத்து வந்தாலும் மூட்டு வலி, மூட்டுவீக்கம் நன்கு தணியும்.

ஈசுரமூலி மூலிகையானது பெருமருந்து எனவும் அழைக்கப்படும். தவளைச் சொறி போன்ற நோய்களுக்கு ஈசுரமூலி இலைகளை சேக ரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு மோரில் கலந்து எடுக்க தோல் நோய்களும், சீதக் கழிச்சலும், இரத்தக் கழிச்சல் போன்றனவும் நீங்கக் கூடியதாக இருக்கும்.

நாட்பட்ட தோல் நோய்களுக்கு ஈசுரமூலி இலைகளை நன்கு கழுவி உலர்த்தி பொடித்தோ, தனித்து உடன் இலைகளை அரைத்தோ எலுமிச்சம்பழச்சாறு விட்டு கலந்து தோல் நோய்களுக்கு பூசிவர நீங்கும். குடலைப் பலப்படுத்துவதற்கு மருந்துப் பொடி நீங்களாகவே தயாரித்து வைத்துக் கொள்ளலாம்.

இவ் மருந்துப் பொடியை குழந்தை பெற்ற பின்பு தாயிற்கு கொடுக்கலாம். **கற்ப சாய** கழிவுகளை வெளியேற்றுதுடன், தாய்ப் பால் சுரப்பையும் அதிகப் படுத்தக் கூடியதாக இருக்கும். இதற்கு பெரும் மருந்து இலைகள் , வேர், சாதிக்காய், ஏலம், நற்சீரகம், கொத்தமல்லி, அன்னாசிப்பூ சம அளவை எடுத்து கழுவி நிழலில் உலர்த்திப் பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். இதனை கறி சமைக்கும் போது சரக்குத் தூளாக பயன் படுத்துவதால் மேற்படி பலன் களைப் பெற முடியும். பொது வாக வட மாகாண காட்டுப் பிர தேசங்களில் இச் செடியை காணலாம். பொதுவாக வெப்பப் பிர தேசங்களிலும் குளிரான பகுதிகளிலும் காணலாம். புதர்க் காடுகளில் மற்ற மரங் களில் ஏறுகொடியாக மலரக் கூடியது. உடம்பில் வலி யேற் பட்டால் பெருமருந்து வேர்ப் பொடி 1-2 கிராம் அளவு தேனில் காலை,மாலை 3 நாட்களுக்கு கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 560





நாளை மாலை இந்த நேரத்துக்குள் இளையபிராட்டியைச் சந்தித்து விடுவோம் என்பதில் சந்தேகமில்லை. ஆகா! அந்தச் சந்திப்பைக் குறித்து எண்ணும்போதே அவனுக்கு மெய்சிலிர்த்தது.

நட்சத்திரச் சுடர்களால் விளங்கிய வானமும் மின்மினி பறந்த பூமியும், சலசலவென்று சப்தத்துடன் ஒடிய முல்லையாற்று வெள்ளமும், மந்த மந்தமாக வந்த குளிர்ப் பூங்காற்றும் வந்தியதேவனைப் பரவசமடையச் செய்தன. வானமும் பூமியும் ஒரே ஆனந்த மயமாக அவனுக்கு அச்சமயம் தோன்றின. பழைய காதல் பாட்டு ஒன்று அவனுக்கு நினைவு வந்தது. தான் வாய் விட்டு உற்சாகமாகப் பாடுவதற்குத் தகுந்த இடந்தான் இது. சுற்றுப்புறமெங்கும் மனித சஞ்சாரமே கிடையாது. ஏன் பட்சிகள் கூடக் கூடுகளிலே சென்று அடங்கிவிட்டன. அவன் பாடுவதற்குத் தடை என்ன இருக்கிறது? இதோ அவன் பாடிய பாட்டு. யாரை மனத்தில் நினைத்து கொண்டு பாடினான் என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

"வானச் சுடர்களெல்லாம்
மானே உந்தனைக் கண்டு
மேனி சிலிர்க்குதடி"
மெய்மறந்து நிற்குதடி!
தேனோ உந்தன் குரல்தான்
தென்றலோஉன் வாய் மொழிகள் மீனொத்த விழி மலர்கள் கண்டால்
வெறி மயக்கம் தருவ தேனோ?

வந்தியத்தேவன் இப்படிப் பாடி முடித்தானோ இல்லையோ, அவனுடன் போட்டி போடுவது போலத் தூரத்தில் நரிகள் ஊளையிடத் தொடங்கின.

அதே சமயத்தில் மனிதக் குரலில் கலகலவென்று சிரிக்கும் சத்தம் கேட்டது.

வந்தியத்தேவன் சிறிது மிரண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுடைய கை உடைவாளில் சென்றது.

புன்னைமரம் ஒன்றின் கரிய நிழலிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது. "தம்பி உன் பாட்டு பிரமாதம்! நரிகளின் பேட்டி கானம் அதை விடப் பிரமாதம்!" என்று கூறிவிட்டுத் தேவராளன் மீண்டும் சிரித்தான்.

## பதின்மூன்றாம் அத்தியாயம்
## விஷ பாணம்

அந்த இடத்தில், அந்த நேரத்தில், தேவராளனைப் பார்த்ததும், வந்தியத்தேவனுடைய உள்ளம் சிறிது துணுக்குற்றது. கடம்பூர் அரண்மனையில் தேவராளன் வெறியாட்டம் ஆடியதும், அப்போது அவன் கூறிய மொழிகளும் நினைவுக்கு வந்தன. நடுக்கடலில் சுழற்காற்றுக் குமுறிக் கொண்டிருந்த வேளையில் ரவிதாஸனும், தேவராளனும் சொன்ன செய்திகளும் ஞாபகத்துக்கு வந்தன. அவற்றில் எவ்வளவு உண்மை, எவ்வளவு கற்பனை என்று கண்டுபிடிப்பது கடினம். ஆனாலும் அவர்கள் ஏதோ ஒரு மர்மமான பயங்கரமான சதிச் செயலில் ஈடுபட்டவர்கள் என்பது நிச்சயம். அவர்களில் ஒருவனிடம் இச்சமயம், அதுவும் இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்தான்.

அவனிடமிருந்து தப்பி, குதிரையை வேகமாகத் தட்டி விட்டுக் கொண்டு போய் விடலாமா என்று ஒரு கணம் எண்ணினான். அந்த எண்ணத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தான்! தூரத்தில் தீயின் வெளிச்சம் தெரிந்தது. அது சுடுகாடாய்த்தான் இருக்கவேண்டும்.

'ஏதோ ஒரு மண்ணுடல் தீக்கிரையாகிக் கொண்டிருக்கிறது. அந்த மண்ணுடலில் உயிர் இருந்த காலத்தில் எத்தனை எத்தனை ஆசா பாசங்களால் அலைப்புண்டிருக்கும்? எத்தனை இன்ப துன்பங்களை அது அனுபவித்திருக்கும்! அரை நாழிகை நேரத்தில் மிச்சம் இருக்கப் போவது ஒரு பிடி சாம்பல்தான்! உலகில் பிறந்தவர்கள் எல்லாரும் ஒருநாள் அடைய வேண்டிய கதி அதுவேதான். மன்னாதி மன்னர்களும் சரி, ஏழைப் பிச்சைக்காரனும் சரி, ஒரு நாள் அக்கினிக்கு இரையாகிப் பிடி சாம்பலாகப் போக வேண்டியவர்களே!' திகில் வந்தது போலவே திடீரென்று விட்டுப் போய் விட்டது. இந்த வேட வஞ்சகக்காரனுக்குப் பயந்து எதற்கு ஓட வேண்டும்? ஏதோ இவன் சொல்லுவதற்குத் தான் வந்திருக்கிறான்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## இளவரசனின் தியாக உள்ளம்

ஒரு நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த அரசன், திடீரென்று இறந்து விட்டான்.

அந்த அதிர்ச்சியில் ராணியும் இறந்து போனாள். அரசனின் ஒரே வாரிசான இளவரசனுக்கு முடிசூட்டுவதற்கான ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

தாய் தந்தையரை இழந்த துக்கம் இளவரசனை துயரத்தில் ஆழ்த்தியது.

அரசகுருவிடம்சென்று, குருவே! துக்கம் எதனால் ஏற்படுகிறது? துக்கம் உண்டாகாமல் வாழ வழி என்ன? என்று கேட்டான் இளவரசன்.

இளவரசே! வழி வழியாக வருவது பாசம்! பாசத்தின் விளைவு துக்கம். பாசத்தை நீக்கி விட்டால், துக்கம் உண்டாகாது என்றார் அரச குரு. பாசத்தை நீக்குவது எவ்வாறு?" என்று கேட்டான் இளவரசன்.

வீடு, மனைவி, மக்கள், சுற்றம், செல்வம், ஆடை, ஆபரணம் போன்ற அனைத்தும் பாசமே! ஒன்றைத் தொடர்ந்து ஒன்று இழுத்துக் கொண்டே செல்லும்" என்றார் அரச குரு.

அவர் சொன்னது இளவரசனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. உடனே இளவரசன் அரண்மனைக்குச் சென்று, அரச உடைகளையும், ஆபரணங்களையும் களைந்து விட்டான். நான்கு முழ வேட்டி ஒன்றை உடுத்தியபடி, அரண்மனையை விட்டு வெளியேறினான்.

அரண்மனையில் உள்ளவர்களும், நகர மக்களும் இளவரசனின் துறவுக் கோலத்தைக் கண்டு வருந்தினர். சிலர் வியப்புற்றனர்.

கையில் ஒரு பாத்திரத்தை ஏந்தியபடி, கால் போன போக்கில் சென்று கொண்டிருந்தான் இளவரசன். எந்த வீட்டின் முன்னேயும் நின்று பிச்சை கேட்பதில்லை. எவரேனும் வந்து பிச்சை இட்டால் ஏற்பான். தான் உண்டு போக, எஞ்சியதை காகங்களுக்கும் நாய்களுக்கும் போட்டு விடுவான்.

இரவு வேளையில் மரத்தடியிலோ, வீட்டுத் திண்ணையிலோ படுத்து உறங்குவான். காலையில் எழுந்து புறப்பட்டு விடுவான்.(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காரியத்தையும் உள்ளன்போடு செய்யுங்கள்; பின் வேறுவிதமாக செய்ய ஒருபோதும் மனம் விரும்பாது. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கப்பல் சேவையை தொடர்ந்து நடத்துங்கள்

காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவை கடந்த 16.08.2024இல் இருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

இந்தச் சேவையில் சிவகங்கை கப்பல் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறுவது பல்வேறு வழிகளில் நமக்கு உதவும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஆயிரக்கணக்கான பயணிகள் நாள்தோறும் சென்று வருகின்றனர். இதில் இலங்கையைச் சேர்ந்தவர்களே அதிகம் எனலாம்.

அதிலும் ஈழத் தமிழ் மக்களும் முஸ்லிம் சகோதரர்களும் அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று வருகின்றனர்.

குறிப்பாக ஈழத் தமிழ் மக்கள் ஆன்மீகம் சார்ந்து தலதரிசனத்துக்காக இந்தியாவின் அனைத்துப் பாகங்களுக்கும் சென்று வருவது வழமை.

பொதுவில் வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களைத் தரிசிக்க வேண்டும் என்ற வேணவா நம் தமிழ் மக்களிடம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது.

எனினும் அந்த விருப்பத்தை எல்லோரும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதுமான பொருளாதார வசதியின்மையால், அந்த விருப்பம் நிறைவேறாமலே போய்விடுகின்றது.

அதிலும் குறிப்பாக, இலங்கைக்கும் இந்தியாவுக்குமான விமான சேவைக் கட்டணம் கனிசமாக இருப்பதால், சாதாரண மக்களால் எதுவும் செய்ய முடியாமல் உள்ளது.

இந்நிலையில் காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்குமிடையில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டதாயினும் அந்த சேவை கிரமமாக நடைபெறாமல் போனமை துரதிர்ஷ்டமே.

இந்நிலையில் கடும் முயற்சிகளுக்கு மத்தியில் மீண்டும் காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கப்பல் கட்டணமும் ஓரளவுக்குத் திருப்தியாக இருப்பதனால், கப்பல் சேவையைத் தொடர்ந்து நடத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் உதவ வேண்டும்.

அதேநேரம் பயணிகள் போதாமல் உள்ளது என்ற நிலைமை தற்காலிகமானது.

மாறாக, தொடர்ந்து கப்பல் சேவை நடைபெற்று உரிய பிரசாரங்கள் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அதிகளவானோர் கப்பல் மூலம் தங்களின் பயணத்தை மேற்கொள்வர்.

பொதுவில் தத்தம் நலன் சார்ந்து காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவைக்கு முட்டுக்கட்டை போடுகின்றவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

ஆகையால் அத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு கப்பல் சேவையைத் திரும்பட நடத்துவதற்குத் தொடர்ச்சியான சேவை – கப்பல் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிப்படுத்தல்கள் அவசியமாகின்றன.

# இலங்கைத் தேசியக் கொடியை பிரசாரங்களுக்குப் பயன்படுத்தத் தடை

## தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடியை பயன்படுத்தினால் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும், இது தொடருமானால் இன்னும் சில நாட்களில் தேசிய கீதம் கட்சியின் பாடலாக மாறும் எனவும் தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பெஃப்ரல் அமைப்பின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசியக் கொடியின் பெருமை இன்று பள்ளத்துக்கு போய்விட்டது. எனவே, தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடியைப் பயன்படுத்த வேண்டாம்.

இப்போது கிரிக்கெட் போட்டிகளில், தேசியக் கொடியைச் சுற்றிக் கொண்டு, ஒரு கையில் மது போத்தலை வைத்துக் கொண்டு நடனமாடுகிறார்கள். அதில் எந்த அரசியல் தத்துவமும் இல்லை.

நாட்டின் வளர்ச்சியை நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை. வீதி அமைத்து திறப்பது பிரச்சினை இல்லை. ஆனால் அரசியல்வாதிகள் பிரச்சினைக்கு வரத் தேவையில்லை. அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல் மக்கள் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றார். (ம-7)

# சஜித்துக்கு விசேட நன்றி தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா

## தென்னிலங்கை அரசியலில் பேசுபொருள்

(கொழும்பு)

இந்திய சுதந்திர தினத்தில் வாழ்த்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு இந்திய உயர்ஸ்தானிகர் விசேடமாக நன்றி தெரிவித்துள்ளமை தென்னிலங்கை அரசியல் களத்தில் பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை அரசியல்வாதிகள் தங்கள் எக்ஸ் கணக்குகள் மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர். இதில் சிலருக்கு இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பதிலளித்திருந்தார்.

மேலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு அவர் நன்றி தெரிவித்திருந்தார்.

இவர்களுக்கு சாதாரணமாக வாழ்த்துத் தெரிவித்திருந்த சந்தோஷ் ஜா, எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸவுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, "எமது இருதரப்பு உறவுகளை உங்களுடன் இணைந்து உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்." என பதில் அளித்திருந்தார்.

இந்த பதில் தொடர்பில் அரசியல் விமர்சகர்கள் மத்தியில் காரசாரமான விவாதம் இடம்பெற்று வருகின்றன. இந்த பதில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான குறியீடாக இருக்கலாம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியா மறைமுகமாக சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்தபின்புலத்திலேயே சந்தோஷ் ஜாவின் இந்தக் கருத்து பல்வேறு தரப்பாலும் அவதானிக்கப்பட்டு வருகிறது. (ம-7)

# அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 55 ஆயிரமாக அடுத்த வருடம் உயர்வு

## ஜனாதிபதி ரணில்

நாட்டிலுள்ள அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அடுத்த வருடம் 55,000 ரூபாவாக அதிகரிக்க உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டின் எதிர்காலம் கருதியே அனைத்து கட்சிகளும் இன்று ஒன்றிணைந்துள்ளோம்.

அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிப்படவுள்ளது.

அத்துடன், அவர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 55,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

சிலிண்டர் விலை 6,000 ரூபாய் வரை உயரும் போது சஜித், அநுர போன்றவர்கள் எங்கே இருந்தனர் என்று கூற வேண்டும்.

அதற்கான பதிலை அவர்கள் வழங்கவில்லையாயின் தேர்தலில் போட்டியிடுவதற்குப்பொருத்தமற்றவர்களாவர்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை சஜித்தோ அநுரவோ மீள கட்டியெழுப்பவில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# நீர்வேலியில் வேலைக்குச் சென்ற இளைஞன் மரணம்

நீர்வேலியில் வேலைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் நெஞ்சு வலிப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இதில் நீர்வேலி மேற்கைச் சேர்ந்த தவராஜா ராகுமாதவா (வயது- 32) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை(18) காலை வீட்டிலிருந்து வேலைக்குச் சென்றதாகவும் நண்பகல் 11.00 மணியளவில் நெஞ்சு வலிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்து கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு பணிப்புரை விடுத்தினார். (ம-7,60)

# சுதேச உற்பத்திகளுக்கே முன்னுரிமை வழங்குவோம்

## நாமல் உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின் சுதேச உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்போம். சுயநல தேவைகளுக்காக எம்மை விட்டு விலகிச் சென்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் யார் யாருக்கு சவால் என்பது குறித்து கவனம் செலுத்துவதை விட நாடு எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். கொள்கை அடிப்படையில் எம்முடன் எவரும் கை கோர்க்கலாம் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

01

இலங்கையின் 1972, 1978 அரசியல் யாப்புக்களை தமிழ் தலைமைகள் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. தமிழ் மக்களின் பங்குபற்றலின்றியே அரசியல் யாப்புக்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் தமிழர்களால் என்ன செய்ய முடிந்தது? தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத அரசியல் யாப்பின் கீழ்தானே, தமிழர்கள் ஆட்சி செய்யப்படுகின்றனர்.

சிங்கள தரப்புகளோடு செய்யப்பட்ட உடன்பாடுகள் ஒரு தலைப்பட்சமாக கிழித்து வீசப்பட்ட போது, தமிழ் தலைமைகளால் என்ன செய்ய முடிந்தது? தமிழ் மக்களின் நியாயத்திற்காக யாராவது வந்து தலையீடு செய்து தீர்வு கண்டனரா?

இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ் தலைவர்களும் சிங்கள ஆட்சியாளர்களும் இனமோதல் தீர்வு நோக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் போதெல்லாம் எதிர்க்கட்சிகள் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதன் மூலம் அவ்வொப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாமலே கிழித்தெறியச் செய்யும் அரசியலே தொடர்ந்து வருகின்றது.

இவ்வாறு எல்லாம் இருந்த போதும், விரும்பியோ விரும்பாமனோ, இலங்கையில் தமிழ், சிங்கள இனங்களுக்கிடையே நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முயற்சிகளும், ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் இன்னமும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன.

நாம் பின்னோக்கி பார்க்கும் போது 1957 இல் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம், 1965 இல் டட்லி சேனநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம், 1985 இல் திம்புப் பேச்சுவார்த்தைகள், 1987 இல் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான 13 ஆவது திருத்தச் சட்டம்.

1990இல் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் அரசியல் தீர்வுகளுக்கான திட்டங்கள். இவரின் காலத்தில் 1991 இல், திரு. மாங்கள முனசிங்க தலைமையில் 45 பேர் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு தீர்வுத் திட்டங்கள் முன்வைப்பு.

1994 திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாயிருந்த காலத்தில், 1995 இல் திரு. நீலன் திருச்செல்வம் மற்றும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் "ஒருங்கிணைந்த வடக்கு,கிழக்கு" அடங்கலான தீர்வுப் பொதி தயாரிப்பு. என்பவற்றைக் குறிப்பிடலாம்.

2001இல் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்ட அரசாங்கம் நோர்வே மத்தியத்துவத்துடன் சுயாட்சி முறையில் அதிகார பரவலாக்கத்துக்கு இணங்கியது நினைவுகூரத்தக்கது.

2015இல் ஆட்சிக்கு வந்த விக்கிரமசிங்க - சிறிசேன "நல்லாட்சி" அரசு, ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் இணைப்பங்காளியாக இருந்தது. இத்தீர்மானத்தின் செயற்பாட்டு உறுப்புரை 16 ஆனது, அரசியல் தீர்வை, அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வலியுறுத்துகிறது.

இவ்வாறு நோக்கும் போது வடக்கு-கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாயிருப்பதுடன், சர்வதேச சமூகத்தினால், ஐக்கிய நாடுகள் சபையினாலும் வரவேற்கப்படுகின்ற ஒன்றாகும். ஆனால் யார் இதில் தலையிட்டு எமக்குத் தீர்வு வழங்கப்போகிறார்கள்?

இலங்கையின் தமிழ் தேசிய பிரச்சினையில் வரலாற்று ரீதியாக இந்தியா ஒரு பிணக்குத்தீர்க்கும் பங்கை வகித்துவந்திருக்கும் அதே வேளை இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் அக்கறையும் செல்வாக்கும் அருகிக்கொண்டே போகிறது என்று தமிழ் அரசியல்வாதிகளிலும் தமிழ்ச் சமூகத்திலும் பலர் கூறுகிறார்கள்.

இலங்கையில் சீனாவின் செல்வாக்கை தடுப்பதற்கான முயற்சிகளில் தீவிர கவனத்தைச் செலுத்தும் புதுடில்லி 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தவேண்டிய தேவை குறித்து வழமையான அறிக்கைகளை வெளியிடுவதை தவிர வேறு எதையும் அது விடயத்தில் பெரிதாக செய்வதில்லை என்று அவதானிகள், விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

## 13ஆவது திருத்தத்தின் பிரதியொன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி தொடக்கத்தில் இலங்கை பாராளுமன்றத்துக்கு அண்மையாக கூடிய பௌத்த பிக்குகள் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பிரதியொன்றை தீயிட்டுக் கொளுத்தினர். அந்தத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதற்கு தங்கள் எதிர்ப்பை அவர்கள் வெளிக்காட்டினர்.

தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவர் என்ற வகையில் தனது பொறுப்பு என்று அவர் சர்வகட்சி மகாநாடொன்றில் கூறியிருந்தார்.

"சுமார் 37 வருடங்களாக 13 ஆவது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. நான் அதை நடைமுறைப் படுத்தவேண்டும் அல்லது எவராவது அதை இல்லாதொழிக்க வேண்டும்" என்று ஜனாதிபதி தெரிவித்தார். எந்த வகையிலும் நாட்டைப் பிளவுபடுத்த தான் தயாரில்லை என்றும் சிங்கள தேசத்துக்கு துரோகம் செய்யப்போவதில்லை என்றும் அவர் உறுதியாகக் கூறியபோதிலும் பிக்குகள் அந்தத் திருத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை காணக்கூடியதாக இருந்தது.

## இன்றைய தேவை பொருளாதார மீட்சியே

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இன்னமும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள் பிரிவினரின் புதிய ஆர்ப்பாட்ட அலை என்பனவே இலங்கையில் இன்று பிரதான தலைப்புச் செய்திகள். 'ஏனைய விவகாரங்கள் எல்லாவற்றுக்கும் முன்னதாக பொருளாதார மீட்சி' என்ற அணுகுமுறையை அரசாங்க ஆதரவாளர்கள் கடைப்பிடிக்கும் நிலையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் இருக்கும் இனநெருக்கடியை கையாளுவதில் விரைவில் அக்கறை காண்பிக்கப்படக் கூடியதற்கான அறிகுறியை காண முடியவில்லை.

## தோற்காத அரசியல் தீர்வு யோசனைகள்

சட்டம், நீதி என்பவற்றிற்கு அப்பால் ஒரு நியாயம் இருக்கின்றது என்பதனை சட்டம் எப்போதும் ஒத்துக்கொள்கின்றது. இந்த அடிப்படையிலே தான் முன்னர் பிரித்தானியாவின் சட்ட வரைபில் ஒப்புரவு நீதி என்கின்ற விடயம் கடைப்பிடிக்கப்பட்டு சட்டம் கண்டு கொள்ளாத விடயங்களைக் கண்டறிந்து நீதி வழங்கப்பட்டு வந்தது.

எந்த ஒரு விடயத்தைச் செய்தாலும் அது சட்டப்படியும் நியாயப்படியும் சரியாக இருக்க வேண்டும். இதில் தனிப்பட்ட நியாயங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

அதாவது சட்டமும் நியாயமும் ஒரே கோட்டில் செயற்படவேண்டும். ஆனால் இன்று நம் நாட்டில் அப்படியில்லை. எந்தத் தவறை வேண்டுமானாலும் செய்யலாம் அதை சட்டப்படி கையாண்டால் போதும் என்ற நிலையைப் பார்க்கிறோம். தவறே நடக்கவில்லை என்று சொல்வதற்கும் அரசு தவறை நிரூபிக்க தவறிவிட்டது என்று சொல்வதற்குமிடையே உள்ள வித்தியாசமே சட்டத்திற்கும் நியாயத்திற்குமிடையே உள்ள இடைவெளி.

இந்த இடைவெளி மிகச் சிறியதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சட்டம் ஒரு திசையிலும் நியாயம் மற்றொரு திசையிலும் பிரயாணிப்பதை பார்க்க முடிகிறது. இத்தகைய பிரயாணங்கள் தீர்ப்புகளை கேலிப்பொருளாக்கிவிடும்.

சிங்கள அரசிடமும் ஓரளவு நியாயம் இருக்கிறது. அதனால்தான் இன்றும் வெளியார் தலையீடு இல்லாத எமது அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது எமது அரசியல் தீர்வு யோசனைகள் இன்னும் தோற்கவில்லை. இதில் இன்னுமொரு கருத்தும் உள்ளது. அதுதான் நம்பிக்கை. நம்பிக்கை இல்லாமல் நியாயம் கிடைப்பது கடினம்.

எனவே நாம் சிங்கள மக்களிடையே நம்பிக்கையை கட்டி எழுப்பவேண்டும். இரு சமூகங்களும் ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கை வைக்கும் போதுதான் ஆரம்பத் தீர்வான 13ஆம் திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் செயற்படுத்துவது இலகுவாகும். நம்பிக்கை இல்லாமல் நியாயம் கிடைக்கப் போவது இல்லை.

பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு காணி அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதாக இலங்கை தமிழ் கட்சிகள் தொடர்ந்தும் வாதிட்டு வருகின்றன. மேலும் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவல் துறை அதிகாரங்கள் அளிக்கப்படுவது என்பது தமிழர்களின் இனப் பிரச்சனைக்கான குறைந்தபட்ச தீர்வாக அமையும் என்றும், அதிகாரப் பகிர்வு அரசியலுக்கான தொடக்கப் புள்ளியாக அது அமையும் என்றும் தமிழர் தரப்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கி...

கடந்த 16ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியைக்கு மூளையில் ஒரு கட்டி இருந்ததாகக் கூறப்படும் நிலையில், அதன் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மரக்கறி...

வதற்காக துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபர் எதிர்த் திசையில் வந்த முச்சக்கரவண்டி மோதி அவ்விடத்தில் படுகாயமடைந்து மயக்கம் அடைந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் கடந்த மூன்றாம் திகதி வீடு திரும்பினார். இந்நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். தலையில் அடிபட்டதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகளில் தெரியவந்துள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## மாட்டுக்...

கிக் கொண்டிருந்தவேளை அவர் உயிரிழந்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழ்.சிறையில்...

வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 12 இல் வசிக்கும் 44 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறைக் கைதி சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதாக சிறைச்சாலைக் காவலர்களுக்கு பல தடவைகள் அறிவித்ததாகவும், பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,30)

## கடற்றொழிலில்...

நாகர்கோவில் பகுதியில் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை கரையிலிருந்து 24 கடல் மைல் தூரத்தில் 100 அடி ஆழத்தில் சிலிண்டரைப் பயன்படுத்தி அட்டைத் தொழிலில் ஈடுபட்டிருந்ததாகவும் நெஞ்சு வலிப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்து ஆழ் பகுதியில் இருந்து மேற்பகுதிக்கு வந்துள்ளார்.

இதனையடுத்து அவரைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## நிறைவேற்று...

தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பல முன்னாள் தலைவர்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை நீக்கம் குறித்த வாக்குறுதியை வழங்கினார்கள். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை, நான் பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புமுறையொன்றை அறிமுகப்படுத்துவேன் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பொருளாதார...

"உலகின் தெற்கு நாடுகளின் குரல்" மாநாட்டின் அரச தலைவர்கள் அமர்வில் நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து இணையவழி மூலம் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தியோகபூர்வ கடன் வழங்கிய நாடுகள், சீனா, எக்ஸிம் வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

மின்சாரம், போக்குவரத்து மற்றும் தரை மார்க்க இணைப்புகள் ஆரம்பிக்கப்படும். மேலும் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி மற்றும் ஏனைய இணக்கம் காணப்பட்ட திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம் என்றார். (ம-7)

## பேரினவாதச்...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

தென்னிலங்கை அரசியல்வாதிகள் இன்று வரை இன நல்லிணக்கம் என்ற விடயத்தை கையிலெடுக்கவில்லை. இதன் காரணமாகவே தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை கையிலெடுத்துள்ளோம்.

உதாரணமாக சொல்லப் போனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் வடக்கு - கிழக்கு ஒற்றுமைக்கு பிரதான காரணமானவர்கள் கிழக்கிலங்கை பத்திரிகையாளர்களே.

அவர்களின் முழு முயற்சியின் விளைவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு விடயம். அதில் முக்கியமான பங்காளர்களாக, தமிழ்ப்பொது வேட்பாளராக களமிறங்கியுள்ள அரியநேந்திரன், பத்திரிகையாளர் தராகி சிவராமன், நடேசன், நீராஜ் டேவிட் ஆகியோர் காணப்படுகின்றனர்.

அந்த பத்திரிகையாளர்களின் முயற்சி வெற்றி பெற்றதல்லவா. அதே போன்றுதான் சிவில் சமூகம் ஒன்றிணைந்து தமிழ்ப் பொது வேட்பாளரை நிலைநிறுத்தியுள்ளது.

இதன்முடிவை இன்றே குறிப்பிட முடியாது. தேர்தலின் பின்னர் இந்த விடயம் வெற்றியடைந்தால் வரலாற்றில் இடம்பிடிக்கும். நல்லிணக்கம் என்ற ஒரு விடயம் தானாக வந்தடையும் என்றார். (ம-7)

## தேர்...

அதிதீவிர சிங்கள வாக்குகளை பெற்றுக் கொள்வதை நோக்கமாக கொண்டிருந்தது. அதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தோம். தற்போது தெற்கில் சிங்கள பௌத்த பேரினவாதம் தலை தூக்காமல் உள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடினோம்.

எமது மக்களை வழிகாட்டுவதற்காக நாங்கள் ஆவணம் ஒன்றை தயாரிக்கவுள்ளோம். அதற்கான சிறு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தெளிவாக மக்களை வழிப்படுத்துவதற்காக தேர்தலுக்கு முன்பாக நாங்கள் ஆவணம் ஒன்றை தெளிவாக வழங்கவுள்ளோம்.

தமிழ்ப் பொது வேட்பாளராக வர்ணிக்கப்பட்டுள்ள அரியநேந்திரன் சம்மந்தமாகக் கலந்துரையாடப்பட்டது. சென்ற கூட்ட தீர்மானத்தின்படி விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து அவருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பதில் கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம். அதுவரைக்கும் எமது கட்சியின் எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ள மாட்டார் என்றார். (ம-7,250)


மஹஜன சம்பத — திகதி 2024.08.18 — சீட்டிழுப்பு இலக்கம் 5569 — W 4 9 8 2 7 1
அத சம்பத — W 8 2 7 1 — சீட்டிழுப்பு இலக்கம் 144
National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.08.18 — சீட்டிழுப்பு இலக்கம் 1599 — V 19 38 50 61 V — Double Chance 11869

மெகா பவர் — திகதி 18/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1917 — O 19 64 70 75 78 — Double Chance 57094

லக்கி 7 VIP — திகதி 2024.08.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0395 — W 4 2 8 6 5 3 W

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3811 — சீட்டிழுப்பு திகதி 18.08.2024 — H 29 59 63 64 — H 00433
தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0878 — தனுசு 11 15 45 62 தனுசு — 04623 — 27

உத்தியோகபூர்வ முடிவுகள் — 18.08.2024 — வெற்றி வாரம் 277 — H 3 6 9 3 7 7 — 32358 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,316,448.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2543 — ஆரஞ்சு நிறம் — சீட்டிழுப்பு திகதி 18.08.2024 — தினம் ஞாயிறு — 01 03 16 47 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,667,020,00 — DLB

சனிதா — திகதி 2024.08.18 — வெற்றி வாரம் 4704 — 02 09 11 74 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,906,788.80 — 94828 — DLB

சசிரி — 517 — 2024.08.18 — கபிலம் — 05 07 47 — 05 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,092,400/- — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4255 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2024.08.18 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 05 19 29 47 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,972,545.60 — 131470 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — G 04 03 13 42 56 — 1719 — மஞ்சள் — 18.08.2024 ஞாயிறு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 539,758,894.20 — DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2369 — சீட்டிழுப்பு திகதி 2024.08.18 — 14 36 57 67 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 59,775,177.60 — 475657 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



இன்று இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத்தில் நடைபெறும் ஊரெழு கானலய நுண்கலைப் பயிலகத்தின் குரு பிரம்மஸ்ரீ வரதராசசர்மா - ரமணசர்மா அவர்களுடைய மாணவன்

**செல்வன் உதயகுமார் ஹிதுஷன்**

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற மஞ்சத்தடி முருகப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**இணுவையூர் வி.கே.குகானந்தன்**
தலைவர், ரசிகப்பிரியா சபா
கலைவளர்ச்சி மையம், இணுவில்.
முன்னாள் உறுப்பினர் நல்லூர் பிரதேச சபை

(1733)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மணப்பெண் தேவை

- ◆ பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1990, அவிட்டம், Bsc.(Hons), Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ காரைநகர், இந்து, கௌரவ குலம், 1989, சித்திரை, Graduate, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ சாவகச்சேரி, இந்து, கௌரவ குலம், 1988, பூரட்டாதி, Bsc. Engineering (Civil), Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ அச்சுவேலி - மானிப்பாய், இந்து, கௌரவ குலம், 1987, பரணி, CIMA (Charted Management Accountant - UK), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ அளவெட்டி - வல்வெட்டி, இந்து, கௌரவ குலம், 1986, பரணி, Graduate, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ கரவெட்டி, இந்து, கௌரவ குலம், 1986, திருவோணம், BA (Hons), Accounting and finance CIMA fully qualified, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ காரைநகர், இந்து, கௌரவ குலம், 1986, மகம், Bsc, MBA, Phd, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ வடமராட்சி, இந்து, கௌரவ குலம், 1985, கார்த்திகை, Msc (Electronic Engineering), UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ பளை, இந்து, கௌரவ குலம், 1984, அவிட்டம், Phd, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ◆ கரவெட்டி, இந்து, கௌரவ குலம், 1984, விசாகம், Graduate, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

S.Sharma J.P Astrologer
✆ - 077 539 3728
☏ - 076 528 4510

(1703)

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.

**CIMS College**
49A, Chapel Street, Jaffna.

(C-1010)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் PPT நிறுவனத்திற்கு

- ❑ கணக்காளர்
- ❑ எழுது வினைஞர்
- ❑ Bus நடத்துனர்(கோளையா) தேவை.

**077 386 6250**
**076 440 8947**

(1732)

## V2 VISA SERVICES
**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு

(C-1010)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:
**075 033 6759**

(216)

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கும் பிரபல புடைவைக் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. இருபாலாரும் (ஆண்/பெண்) விரும்பத்தக்கது.

**077 839 3974**
**077 606 1333**

(265)

## பேக்கரி வேலையாட்கள் தேவை

பேக்கரி வேலை பழக விரும்புபவர்களும் அனுபவமுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும். வேலை நேரம் : 12.30pm - 12.00am வரை
ஆண்/பெண்

**077 325 3610**

(267)

உ

திருச்சிற்றம்பலம்

# தமிழர்களாகிய நாம் எங்கள் பிள்ளைகளுக்கு தூய தமிழில் பெயர் வைப்போம்.

# தமிழ்ப் பெயர்களை இலகுவாகத் தேர்ந்தெடுக்க புதிய தளம்

# www.peyar.org

இது ஒரு தென்னாடு முன்னெடுப்பு ஆகும்.

(C-1011)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.